செய்தி வெளியீடு **நாள் : 26.08.2025**

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் சென்னை, தீவுத்திடல் கண்காட்சி மையம், கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையம், அரசு ஸ்டான்லி மருத்துவமனை சாலை 776 அடுக்குமாடி குடியிருப்புகள், வால்டாக்ஸ் ரோடு, தண்ணீர் தொட்டி தெருவில் உள்ள இரத்த சுத்திகரிப்பு மையம், 844 அடுக்குமாடி குடியிருப்புகள், சமுதாய நலக்கூடம் மற்றும் விளையாட்டு திடல் என "ஒருங்கிணைந்த வளாகம்" , சந்திரயோகி சமாதி சாலை சமுதாய நலக்கூடம் மற்றும் புரசைவாக்கம், கான்ரான் ஸ்மித் சலவைக்கூடம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப் பணிகளை மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் ஆய்வு

****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (26.8.2025) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் சென்னை, தீவுத்திடலில், கட்டப்பட்டு வரும் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய கண்காட்சி மையம், கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையம், சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவமனை சாலையில் கட்டப்பட்டு வரும் 776 அடுக்குமாடி குடியிருப்புகள், துறைமுகம் தொகுதி, வால்டாக்ஸ் ரோடு, தண்ணீர் தொட்டி தெருவில் புதிதாக கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மையம், 700+144 அடுக்குமாடி குடியிருப்புகள், சமுதாய நலக்கூடம் மற்றும் விளையாட்டு திடல் என "**ஒருங்கிணைந்த வளாகம்**", திரு.வி.க.நகர் தொகுதி, பெரம்பூர், சந்திரயோகி சமாதி சாலையில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூடம் மற்றும் புரசைவாக்கம், கான்ரான் ஸ்மித் சாலையில் கட்டப்பட்டு வரும் சலவைக்கூடம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப் பணிகள் குறித்து மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினார்.

மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய தொகுதி வாக்குறுதிகள் வண்ண மீன்கள் வியாபார பெருமக்கள் பெருமளவில் பொருளாதாரத்தை ஈட்டுகின்ற ஒரு துறையாக இந்த துறை செயல்படுவதால் சாலையோரங்களில் பல வண்ணமீன் விற்பனை நிலையங்கள் அமைந்திருப்பதை கண்டு அவர்களுடைய கோரிக்கையாக வண்ண மீன்கள் விற்பனைக்கு என்று தனியாக ஒரு வளாகம் உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருந்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்தலின் போது நிச்சயமாக நான் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால் இந்த வண்ண மீன்களுக்கு என்று தனியாக விற்பனை மையத்தை ஏற்படுத்தி தருவேன் என்று கூறி, வெற்றி பெற்ற பிறகு அந்த வண்ண மீன் உற்பத்தியாளர்களை நேரடியாக அழைத்து அவர்களோடு கலந்து ஆலோசித்து அவர்களுடைய தேவையை அறிந்து அவர்களுடைய கனவுகளை நிறைவேற்றுகின்ற வகையில் இன்று (26.8.2025) 184 கடைகள் பல்வேறு அளவு கொண்ட கடைகளை கட்டி இருக்கின்றோம். பிரத்தியேகமாக ஒரு உணவுக் கூடம் அதேபோல் இரண்டு இடங்களில்

Verified RealEstate

பவுண்டைன்கள், பாதுகாக்கப்பட்ட குடிநீர், பார்க்கிங் வசதி ஒரே நேரத்தில் 200 கார்கள் நிறுத்துகின்ற அளவிற்கு பார்க்கிங் வசதி, இரண்டு சக்கர வாகனங்கள் 400க்கும் மேற்பட்ட வாகனங்கள் இருந்தாலும் நிறுத்துகின்ற அளவிற்கு இருசக்கர வாகனங்களினுடைய பார்க்கிங் வசதி. அதேபோல் தடையில்லாத மின்சாரத்திற்கு அதிக கொள்ளளவு கொண்ட KV டிரான்ஸ்பார்ம். அதேபோல் மழைக்காலங்களில் மழைநீர் தேங்காமல் இருப்பதற்காக மழைநீர் வடிகால்களை அமைப்பது என்று பல்வேறு பணிகள் திட்டமிடப்பட்டு, இது ஒரு சென்னையிலேயே உலகத்தரம் வாய்ந்த ஒரு வண்ண மீன்கள் அங்காடியை உருவாக்குகின்ற நோக்கத்தோடு இன்றைய தினம் இதை பார்வையிட்டு இருக்கின்றோம். எங்கள் துறையினுடைய செயலாளர் அன்பிற்கினிய திருமதிகாகர்லா உஷா அவர்களும், அதேபோல் கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறையின் செயலாளர் அன்பிற்கினிய டாக்டர் சுப்பையன் அவர்களும் அதேபோல் எங்கள் துறையினுடைய சிஇஓ திரு.சிவஞானம் அவர்களும், மின்வளத்துறை ஆணையாளர் திரு.முரளிதரன் அவர்களும், மாநகராட்சி துணை ஆணையாளர் திரு.கௌசிக் அவர்களும் இன்றைக்கு பார்வையிட்டு இருக்கின்றோம். அடுத்த மாதம் செப்டம்பர் இறுதிக்குள் அல்லது அக்டோபர் முதல் வாரத்தில் வண்ண மீன் உற்பத்தியாளர்களுடைய பயன்பாட்டிற்கு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** தான் இந்த திட்டத்தை தங்களுடைய பொற்காலங்களால் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். அவருடைய பொற்கரங்களாலேயே இந்த கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தை திறந்து வைப்பார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். **இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்**.

இந்த ஆய்வுகளின்போது மாண்புமிகு மேயர் திருமதி.பிரியா, திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் சுப்பையன், இ.ஆ.ப., சிஎம்டிஏ முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையாளர் திரு.க.வீ.முரளிதரன், இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர்கள் திரு.கூ.பீ.ஜெயின், திரு.பி.ஸ்ரீராமுலு, தலைமை பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர்கள் திருபாலமுருகன், திரு.ராஜன்பாபு, மாநகராட்சி மண்டல அலுவலர் திரு.விஜய்பாபு, மாமன்ற உறுப்பினர்கள் திரு.தாஹா நவீன், திருமதி.சுதா தீனதயாளன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified RealEstate™